**OS.No.438/2019 P.W.1-பாஞ்சாலை 17.04.2026**

<u>1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சொத்தில் பாதி கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் எங்குள்ளது என்றால் திருப்போரூர் மற்றும் நல்லாத்தூரில் உள்ளது. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்கள். என் தாத்தா சம்பாதித்த சொத்துக்கள். தாவா சொத்துக்கள் அனைத்தும் முதல் பிரதிவாதி மணி என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்து திருப்போரூரில், சான்றோர் தெருவில் உள்ள வீடு மற்றும் வீட்டு மனை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் கிராம நத்தம் சொத்துக்களா என்றால் இல்லை. பட்டா சொத்துக்கள். சரோஜாம்மாள் யார் என்றால் யார் என்று எனக்கு தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 2 சரோஜாம்மாளின் சொத்து என்றால் கிடையாது. தாவா ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 2-யை முதல் பிரதிவாதி மணி என்பவர் சரோஜா அம்மாளிடமிருந்து 1575 சதுர அடி கிரயம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது.

முதல் பிரதிவாதி என்னுடைய தம்பி. அவர் கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் இல்லை, விவசாய வேலை செய்கிறார். இந்த வழக்கில் முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவரது எதிர்வழக்குரையில் கொத்தனார் வேலை செய்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் சும்மா சொல்லியிருப்பார். முதல் பிரதிவாதி கொத்தனார் வேலை தான் செய்கிறார் என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 2 முதல் பிரதிவாதி மணியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதில் எனக்கு பாகம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல, அது என் தாத்தாவின் சொத்து. என் அப்பாவின் பெயர் என்னவென்றால் ராமகிருஷ்ணன். திருப்போரூரில் உள்ள தாவா ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 1 ஆனது என் அப்பா ராமகிருஷ்ணனின் சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து என் அப்பாவிற்கு 1957-ல் தங்கவேலு எழுதி வைத்த உயில் மூலம் கிடைத்தது என்றால் எனக்கு அது பற்றி

தெரியாது. எனவே திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்களை மணி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

1994-1995 கால கட்டத்தில் கிராம நத்தம் சொத்துக்களுக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா எண்.341, புதிய சர்வே எண்.275/9, 284 சதுர மீட்டருக்கு முதல் பிரதிவாதிக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மணி பெயரில் பட்டா இருக்கும் விவரம் எப்பொழுது தெரிந்து கொண்டேன் என்றால் இன்றைக்கு வரையில் தெரியாது. திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்கள் கூட்டுகுடும்ப சொத்துக்கள் கிடையாது என்றும், அது மணி என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல, பொது சொத்துக்கள் தான். திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்கள் பொது சொத்துக்கள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்களுக்கு என் பெயரையும் சேர்த்து கூட்டு பட்டா உள்ளதா என்றால் இல்லை. திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்கள் மணியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதில் எனக்கு பாகம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல, எனக்கு பாகம் உண்டு.

தாவா ஏ அட்டவணை அயிட்டம் 2 சொத்தை சரோஜா அம்மாளுக்கு சொந்தமானது என்றும், அதை 27.07.1983 தேதியிட்ட உயில் முன்னிலைக்கு முதல் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்து விட்டார் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்களில் உள்ள வீடு மற்றும் அதன் விஸ்தீரணம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தாவா ஏ அட்டவணை அயிட்டம் 2 சொத்தானது உயில் முன்னிலைக்கு மணி என்பவருக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. அந்த சொத்திற்கும் பட்டா எண்.753 கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருப்போரூரில் சான்றோர் தெருவில் இருக்கும் சொத்துக்களில் 300 சதுர அடி சேஷமூர்த்தி மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் பெயரில் கிரய பத்திரம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 300 சதுர அடி அவர்களுக்கு சொந்தமானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா ஏ

அட்டவணை சொத்துக்கள முழுவதற்கும மணி என்பவா பெயரில தான பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா பி அட்டவணை சொத்துக்கள் தண்டலம் கிராமத்தில் உள்ளது. அதில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் 2 அயிட்ட சொத்துக்கள் உள்ளது. சொத்து விவரத்தில் தண்டலத்தில் 5 அயிட்ட சொத்துக்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சர்வே எண். 218/2-ல் 47 சென்ட் தண்டலத்தில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதில் அந்த சொத்து குடும்பத்திற்கு கிடையாது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)